செய்தி வெளியீடு எண். 998 நாள்.21.12.2009

**<u>மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.12.2009 (திங்கட்கிழமை) அன்று ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.</u>**

மாண்புமிகு தமிழகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.12.2009 (திங்கட்கிழமை) அன்று காலை 10.30 மணிக்கு ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், அஞ்சானூர் ஊராட்சியில் நடைபெறும் அரசு விழாவில், பெரியார் நினைவு சமத்துவபுரம் திறந்து வைத்தும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியும், புதிய கட்டடங்களை திறந்து வைத்தும், வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் விழா பேருரையாற்ற உள்ளார்கள்.

மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.இராசா அவர்கள் தலைமையுரையாற்ற உள்ளார்கள்.

முன்னதாக, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.சுடலைக்கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்ற உள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.என்.ஆர்.கோவிந்தராஜர், திரு.அ.கணேசமூர்த்தி, திரு.செ.சிவசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.என்.கே.பி.பி.ராஜா, திரு.கே.ஏ.செங்கோட்டையன், திரு.ஒ.சுப்பிரமணியம், திரு.எல்.பி.தர்மலிங்கம், திரு.எஸ்.எஸ்.குருசாமி, திரு.ஆர்.எம்.பழனிசாமி, திரு.விடியல் எஸ்.சேகர், திரு.கே.வி.இராமநாதன், திரு.சி.பொன்னுதுரை, வணக்கத்திற்குரிய ஈரோடு மாநகராட்சி மேயர் திரு.க.குமார் முருகேஷ், ஈரோடு மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.எஸ்.வி.சரவணன், நம்பியூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.நஞ்சம்மாள் பெரியசாமி, அஞ்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.விஜயலட்சுமி பொன்னுச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு.என்.சீனிவாசன் அவர்கள் நன்றியுரையாற்ற உள்ளார்கள்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இரா.சுடலைக்கண்ணன், இ.ஆ.ப. அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.